## இராணுவச் சடலங்கள், ஆயுதங்களை பெருந்தொகையானோர் பார்வை

மன்னார் வேப்பங்குளத்தில் கடந்த சனிக்கிழமை விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் உயிரிழந்த ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் உடல்களும், அத்தாக்குதலின் போது கைப்பற்றப்பட்ட பெருமளவு ஆயுதங்களும் நேற்றுக் காலை முதல் விடுதலைப் புலிகளால் யாழ் முத்திரைச் சந்தியில் பார்வைக்கு வைக்கப்பட்டன. விசேடமாக அமைக்கப்பட்டிருந்த இரு கொட்டகைகளில் ஒன்றில் 23 இராணுவத்தினரது சடலங்களும் மற்றையதில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் குவியல்களும் வைக்கப்பட்டிருந்தன. சிறுவர் முதல் பெரியோர் வரை

— 04 ஆம் பக்கம் பார்க்க

## விமானமூலம் இந்தியா சென்றவர்களும் நிவாரணம் தருமாறு கோருகின்றனர்

தமது சொந்தத் தேவைகளுக்காக இந்தியா சென்று விமானம் மூலம் இலங்கை திரும்பிய சிலர் அகதிகளுக்காக வழங்கப்படும் நிவாரணப் பணம் தமக்கும் கிடைக்க வேண்டும் என்று யாழ் செயலகத்தைக் கேட்டுள்ளதாகத் தெரியவருகிறது. வடக்கு கிழக்கில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இந்தியா சென்று அங்குள்ள அகதிகள் முகாம்களில் தங்கியிருந்து கடல் மார்க்கமாக மீண்டும் தாயகம் திரும்பியோருக்கே நிவாரணப் பணம் தற்போது யாழ் செயலக புனர்வாழ்வுப் பிரிவால் வழங்கப்பட்டுவருகிறது. சிலர் ஏற்கனவே

— 04 ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு விலை ரூபா: 4-50

# முரசொலி

முரசு 05 ஒலி 126 பிரமோதூத பங்குனி 19 ( 02-04-1991 ) செவ்வாய்

## தி. மு. கவுக்கு எதிராக 'சுவாமி' புத்தகம் எழுதுகிறார்

தி. மு. க வுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் இருக்கும் உறவைப்பற்றி 48 பக்கங்களில் தான் ஒர் புத்தகம் எழுதுவதாக மத்திய உள்துறையமைச்சர் சுப்பிரமணியம் சுவாமி தெரிவித்துள்ளார். இந்நூலில் பயங்கர தகவல்கள், அரிய புகைப்படங்கள் என்பன உள்ளன. இப்புத்தகம் மூலம் தேர்தலில் தி. மு. கவை தோல்வியடையச் செய்யலாம் என அவர் குறிப்பிட்டுள்ளார். இந்நூல் புதுவருடப்பிறப்பன்று வெளிவரும் எனத் தெரிவிக்கப்படுகிறது இது குறித்து செய்தியாளர்கள் கருணாநிதியை அணுகிய போது, ''முதலில் புத்தகம்

— 04 ஆம் பக்கம் பார்க்க

★ சுயநிர்ணய உரிமையை வழங்கினால் நிரந்தரத்தீர்வு

# தமிழரின் போராட்டத்தை அடக்கிவிட முடியாது!

## கொம்யூனிஸ்ட்கட்சி மாநாட்டில் செயலாளர்

''தமிழ்பேசும் மக்கள் நியாயத்துக்காக அடிப்படை உரிமைகளுக்காக சுயநிர்ணய உரிமைக்காகத்தான் இன்று போராடிக்கொண்டிருக்கிறார்கள். இராணுவ நடவடிக்கையின் மூலம் ஒரு தேசிய இனத்தின் போராட்டத்தை நசுக்கிவிட முடியாது; அடக்கிவிடவும் முடியாது-'' இவ்வாறு இலங்கைக் கொம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய மாநாட்டில் உரையாற்றிய பொதுச்செயலாளர் கே. பி. சில்வா குறிப்பிட்டார்!

மேற்படி மாநாடு கொழும்பு புதிய நகர மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை திரு. பீட்டர் கெனமன் தலைமையில் நடைபெற்றது.

தொடர்ந்து பேசிய திரு. சில்வா, வட கிழக்கில் யுத்தம் உடனடியாக நிறுத்தப்பட்டு அரசாங்கமே அரசியல் தீர்வுக்கான யோசனைகளை முன்வைத்து சகல தரப்பினருடனும் பேசி ஒரு நிரந்தர சமாதானத்துக்கு வழிவகுக்க வேண்டும்.

இந்த அர்த்தமில்லாத யுத்தத்தின் பொருளாதாரப் பாதிப்பை ஏழை மக்கள்தான் சுமக்கவேண்டியுள்ளது.

இப்பிரச்சினையைத் தீர்க்காமல் ஒரு நிரந்தர அமை

—04 ஆம் பக்கம் பார்க்க

## யாழ் அரசாங்க அதிபர் பதவி உயர்வுடன் இடமாற்றம்

யாழ் அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் துறைமுகங்கள் கப்பல்துறை இராஜாங்க அமைச்சின் செயலாளராகப் பதவி உயர்வு பெற்றுச் செல்கிறார்.

யாழ் குடாநாட்டுக்கு தற்போதுள்ள சூழ்நிலையில் இவ்வமைச்சு அதிக பங்கை வகிப்பதனால் அவரின் சேவை தொடர்ந்து இங்கு கிடைக்க

## முதியோருக்கான கல்வி கிளிநொச்சியில் ஆரம்பம்

## இரு அதிகாரிகள் பலியாம்

மன்னார் வேப்பங்குளம் பகுதியில் கடந்த சனியன்று நடைபெற்ற மோதலில் இராணுவ அதிகாரிகள் இருவர் உட்பட 25 படையினர் கொல்லப்பட்டதாக நேற்று கொழும்பில் பாதுகாப்பு அமைச்சுஉறுதி செய்துள்ளது.

## நயினாதீவு கடற்படை குறிகாட்டுவான் நோக்கி ஷெல்

நயினாதீவுக் கடற்படையினர் குறிகாட்டுவான்நோக்கி பீரங்கி, ஷெல் தாக்குதல்களை தினமும் மாலை 5 மணிக்குப் பின் மேற்கொள்ளுவதாகத்தெரிவிக்கப்படுகிறது.

காலை 8 மணிதொடக்கம் மாலை 5 மணிவரை படகுச் சேவை நடைபெறுவதனால் அவ்வேளையில் கடற்படையினர் தாக்குதலுக்குத் தவிர்த்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## ஊர்காவற்றுறை இராணுவம் நாரந்தனை நோக்கி ஷெல்

ஊர்காவற்றுறை இராணுவ முகாமிலிருந்து நேற்றுமுன் தினம் காலை 9 மணி முதல் பகல்வரை கடும் ஷெல் தாக்குதல்கள் நாரந்தனை பகுதிகளை நோக்கி மேற் கொள்ளப்பட்டன இரவிலும் இடையிடையே இத் தாக்குதல் தொடர்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதனால் பல வீடுகள் சேதமடைந்துள்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## வவுனியாவில் கைதான 20 இளைஞர்கள் விடுதலை

கடந்த ஒரு மாதகாலமாக வவுனியா இராணுவ முகாமிலும் மகஸின் சிறையிலும் தடுத்து வைக்கப்பட்டிருந்த 20 வடபகுதி இளைஞர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் வவுனியா, யாழ்ப்பாணம், தனுக்காய், மூளைத்தீவு பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர். ஜி. பிரேமச்சந்திரன், எம். அம்புரோஸ், எம். அருட்சிலன், எம். சிவகுரு, ஜே. பி. டக்ளஸ், தே. கணேசன், எம். பரமலிங்கம்,

— 04 ஆம் பக்கம் பார்க்க

## வேப்பங்குளம் தாக்குதலில் வீரமரணமடைந்த வேங்கைகள்

கடந்த சனியன்று மன்னார் மாவட்டத்திலுள்ள வேப்பங்குளம் பகுதியில் இராணுவத்தினரைச் சுற்றிவளைத்து தாக்குதல் நடாத்தியதில் 24 இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் பல நவீனரக ஆயுதங்களையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றியது தெரிந்ததே.

இம்மோதலில் வீரமரணமடைந்த 12 போராளிகளின் விவரம்:

லெப். ஜான் (செபமாலை

— 04 ஆம் பக்கம் பார்க்க

## வீரமரணம்

கடந்த வியாழனன்று மாவிட்டபுரத்தில் காயமடைந்த போராளிகளுக்கு முதலுதவிச் சிகிச்சை அளித்துக் கொண்டிருந்தபோது இராணுவத்தினரின் குண்டு தாக்கி வேலாயுதம் ஜெகநாதன் வீரமரணமடைந்தார்.

இவர் மாணவர் இயக்க உறுப்பினரும் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தீவிர ஆதரவாளருமாவார். (71)

## கிளிநொச்சியில் ஆரம்பம்

அரசின் முதியோருக்கான புதிய கல்வித்திட்டத்தின் கீழ் கிளிநொச்சிப் பகுதியில் இக்கல்வி நேற்றுமுதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முதியோருக்கு எழுத்தறிவை ஊட்டி அறிவை விருத்தி செய்வதற்காகவே இந்த வகுப்புக்கள் நடைபெறவுள்ளன

கிளிநொச்சி கல்வித் திணைக்களம் இதனை தருமபுரம் மகாவித்தியாலயம், கனகாம்பிகைக்குளம் ம.வித்தியாலயம், அக்கராயன் அ.த.க. பாடசாலை ஆகியவற்றின் சூழலிலுள்ள வயோதிபர்களுக்கு இந்த வகுப்புக்களை ஆரம்பித்துள்ளது.

கல்வி அதிகாரிகளான எம். கமலநாதன், எம். தர்மரட்ணம், எஸ். பொன்சபாபதி ஆகியோர் இதனை ஆரம்பித்துவைத்தினர். (56)

தொடர்ந்து இங்கு கிடைக்கு

— 04 ஆம் பக்கம் பார்க்க

## குடியேற்றம் மீது தாக்குதல்

அப்பாறை சிங்கள விவசாயக்குடியேற்றம் மீது நடாத்தப்பட்ட தாக்குதலில் 5 சிங்களவர்கள் பலியாகியுள்ளனர். இச்சம்பவத்தில் மேலும் ஒருவர் காயமடைந்து தப்பிவிட்டார்,

# ஊர்காவற்றுறையில் மோதல் படையினர் முகாம் திரும்பினர்

ஊர்காவற்றுறை இராணுவ முகாமிலிருந்து சின்னமூலாய், பொன்னாச்சிக்கடை ஆகிய பகுதிகளிற்கு வெளியேறிவந்த இராணுவத்தினர் மீது 300 யார் தூரத்தில் விடுதலைப் புலிகள் தாக்குதலை நடாத்தினர்.

நேற்று முன்தினம் காலை 11.30 தொடக்கம் 2 மணி வரை நடைபெற்ற இத் தாக்குதலின் போது ஒரு ஹெலியிலிருந்தும் கடலில் இருந்தும் பீரங்கித்தாக்குதலும் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

இறுதியில் இராணுவத்தினர் முகாமிற்கு பின்வாங்கினர். (71)

### யாழ் அரசாங்க அதிபர் உத்தரவு

## காரைநகர், இளவாலை மக்களுக்கு ஒருவாரம் உலர் உணவு

குடாநாட்டின் சில பகுதிகளில் தோன்றியுள்ள அசாதாரண நிலை காரணமாக இடம்பெயர்ந்து வரும் மக்களுக்கு உடனடியாக நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு யாழ் அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிறட் சம்பந்தப்பட்ட உதவி அரசாங்க அதிபர்களைப் பணித்துள்ளார்.

காரைநகர், இளவாலை போன்ற இடங்களில் இருந்து பெருமளவு மக்கள் இடம்பெயர்ந்து வேறு இடங்களுக்கு சென்றுள்ளதாகக் கிடைத்த தகவல்களையடுத்து அரச அதிபர் இப்பணிப்புரையை வழங்கியுள்ளார்.

ஒரு வார காலத்திற்கான உலர் உணவுப் பொருட்களை உடனடியாக வழங்குமாறும் அவர் கேட்டுள்ளார். (66)

# காரைநகர் முகாம் மீது புலிகள் கடும் தாக்குதல்

நேற்று இரவு 8.30 மணியளவில் காரைநகர் கடற்படைத் தளத்தின் மீதும் சிநோர் இராணுவ முகாம் மீதும் விடுதலைப்புலிகள் அதிரடித் தாக்குதலைத் தொடுத்துள்ளனர். இத் தாக்குதலின் போது புலிகள் பசிலன் 2000 தாக்குதலை மேற்கொண்டு வருகின்றனர்.

முதல் அரைமணி நேரச் சண்டையின் பின் பலகாட்டுச் சந்தியிலிருந்து 100 யார் தூரத்தில் உள்ள கடற்படையினரின் காவலரண்கள்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## முத்தமிழ்விழாவும், மாணவர்களும்

அன்பார்ந்த மாணவர்களே,

எமது தேசிய விடுதலைப் போராட்டம் இன்று ஒரு பாரிய வளர்ச்சியடைந்து தமிழ் மக்களுக்கும், தமிழ் ஈழத்திற்கும் புகழ் சேர்த்துக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில், நாம் எமது தேசிய விடுதலையை முன்னெடுக்கும் அதே நேரம் எமது கலை, கலாசாரத்தையும் பேணிப் பாதுகாக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். எமது பாரம்பரிய கலை, கலாசாரம் மேற்கத்தேய நாகரிக ஊடுருவலால் அழிந்து போகும் நிலை இன்று நிலவுகின்றது. எனவே நாம் இந்த நிலையை வளரவிடாது எமது கலை, கலாசாரத்தையும் கட்டிக் காக்க வேண்டும்.

தமிழர்களின் கலை, கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் வகையில் ''முத்தமிழ் விழாவை'' இந்த ஆண்டிலிருந்து மாபெரும் விழாவாகக் கொண்டாடுகிறோம்.

புராதன காலமாகிய சங்க காலத்திலிருந்தே எமது கலை, கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் இப்படியான நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. இக்காலத்திலே கற்றோரும், மற்றோரும் தமது இலக்கியத் திறனை வளர்ப்பதற்காக இப்படியான நிகழ்ச்சிகளை நடாத்தினர். அதன் மூலம் அன்றைய இலக்கியங்கள் வேகமாக வளர்ந்தன. இதேபோல இன்று மருவி வரும் எமது கலை, கலாசாரத்தை வளர்ப்பதற்காக நாம் பாரிய அளவில் இம் முத்தமிழ் விழாவை ஏற்பாடு செய்துள்ளோம்.

எமது பாரம்பரிய கலை, கலாசாரத்தையும், தேசியத் தன்மையையும் பேணிப் பாதுகாப்பதற்கான இப் போராட்டத்தில் இப்படியான நிகழ்ச்சிகள் நடைபெறுவது எமது இலட்சிய உறுதியை வலுப்படுத்துமென்பதில் ஐயமில்லை.

எனவே எமது கலை, கலாசாரத்தைப் பேணிப் பாதுகாப்பதோடு, எமது இலட்சிய உறுதியையும் வலுப்படுத்தி எமது தேசிய இன விடுதலைப் போரை முன்னெடுக்கின்ற சக்தியை எமது மக்களுக்கு வழங்கக் கூடியதும் முத்தமிழ் விழாவை மாணவர்களாகிய நீங்கள் உங்களது முழு ஒத்தாசைகளையும் வழங்கிச் சிறப்பிக்க வேண்டும். இவ்விழாவிலே இயல், இசை, நாடகம் போன்ற கலை, கலாசார நிகழ்வுகளில் பங்கு கொண்டு எமது தேசிய இன விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்து மாணவர் சக்தி மாபெரும் சக்தி என்பதை நிரூபிப்பீர்கள் என நம்புகின்றோம்.

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

— விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

பொது அபிவிருத்திக்கென ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கிய நிதியில்

# தெற்கில் 4 லட்சம் பேருக்கு வேலை!

ஸ்ரீலங்கா அரசு நான்கு இலட்சம்பேருக்குத் தொழில் வாய்ப்புஏற்படுத்தும் வகையில் தெற்கில் பாரிய அபிவிருத்தித் திட்டம் ஒன்றை ஆரம்பிக்க சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவுள்ளது என்று அறிவிக்கப்படுகிறது.

இத்தகவல் கொக்கல பீச் ஹோட்டலில் கைத்தொழில் விஞ்ஞான அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் வெளியிடப்பட்டது.

இந்த வேலைகளின் பெரும் பகுதி ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஒத்துழைப்புடன் நடைபெறவிருக்கின்றது. இருந்தும் அபிவிருத்தித் திட்டங்கள் ஒன்று இத்திட்டத்திற்குப் பெயரிடப்பட்டிருக்கின்றது.

இந்த அபிவிருத்தித் திட்டங்களில் முதலாவது கட்டத்தில் 60 ஆயிரம் பேருக்கு கைத்தொழில் துறைகளில் வேலைவாய்ப்புகள் வழங்கப்படவுள்ளனவாம்.

பொதுவான அபிவிருத்தித் திட்டங்களுக்கென ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் பெறப்பட்ட பெரும் நிதியை அரசு தெற்குக்கு மாத்திரமே இனரீதியில் ஒதுக்கிப் பயன்படுத்தவுள்ளது எனவும் சுட்டிக்காட்டப்படுகிறது. (38)

## முத்தமிழ் விழா; முழுமையான பங்களிப்புக் கோரப்படுகின்றது

எதிர்வரும் 6 ஆம் திகதி விடுதலைப்புலிகள் கலை கலாசாரப் பிரிவினரால் நடாத்தப்படும் முத்தமிழ் விழாவை வரவேற்கும் வகையிலும் சிறப்பாக அமைக்கும் வகையிலும் அன்பான மக்கள், பொது அமைப்புக்கள் நிறுவனங்கள உடைய பங்களிப்பை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பிரசாரப் பிரிவினர் வேண்டி நிற்கின்றனர்.

முத்தமிழ் விழாவை வரவேற்கும் வகையில் 1 ஆம் நாளில் இருந்து 5 ஆம் நாள் வரை, மக்களே தமது கிராமங்களில் கலை கலாசாரப் பிரிவினரால் அங்கீகரிக்கப்பட்ட கலை நிகழ்ச்சிகளை நடாத்தி முத்தமிழ் விழாவினை வரவேற்றல், வீதிகள் தோறும் எமது கலை கலாசாரத்தினை சித்தரிக்கும் அலங்கார வளைவுகள், ஒவியங்கள், பந்தல்களை நிறுவுதல், வீதிகள் தோறும்பதாகைகளைத் தொங்கவிடுதல்யாழ் மாவட்ட ரீதியில் சிறந்த அலங்கரிப்புகள் முதல் மூன்றிற்கு யாழ் மாவட்ட பிரசாரப்பிரிவினர் சிறந்த பரிசில்களை வழங்கவுள்ளனர்.

### இயக்குநர்சபை

வேலணை ப.நோ.கூ. சங்க இயக்குநர் சபைக்கூட்டம் உதவி கூட்டுறவு ஆணையாளர் தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் புதிய நிருவாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்—பொ.நடராசா

இயக்குநர்—பொ.மாணிக்கமணி

உபதலைவர்—த.புண்ணிய மூர்த்தி. (66)

## முத்தமிழ் விழாவுக்கான ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் கலைகலாசாரப் பிரிவினர் ஏற்பாடு செய்துள்ள பத்து நாள் 'முத்தமிழ் விழா' எதிர்வரும் சனிக்கிழமை ஆரம்பமாகின்றது.

வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் ஆகிய பகுதிகளில் இதற்கென விசேடமாக அமைக்கப்பட்டுள்ள அரங்குகளில் இந் நிகழ்ச்சிகள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. வலிகாமம் பகுதி நிகழ்ச்சிகள் எதிர்வரும் 6 ஆம் 7 ஆம் திகதிகளில் மானிப்பாயிலும், தீவுப்பகுதி நிகழ்ச்சிகள் 8 ஆம், 9 ஆம் திகதிகளில் புங்குடுதீவிலும், தென்மராட்சியில் 10 ஆம், 11 ஆம் திகதிகளில் சாவகச்சேரியிலும்" வடமராட்சியில் 12 ஆம், திகதிகளில் நெல்லியடியிலும் நடைபெறும்.

14 ஆம், 15 ஆம் திகதிகளில் இறுதி நிகழ்ச்சிகள் நடைபெறும் இடம் பின்னர் அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (70)

## தொழில் நுட்பக்கல்லூரிக்குபுதிதாக 1400 மாணவர்கள் அனுமதி

யாழ் தொழில் நுட்பக்கல்லூரியில் 1990-91 ஆம் கல்வியாண்டில் கல்விகற்பதற்கென புதிதாக 1400 க்கும் மேற்பட்ட மாணவர்கள் புதிதாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளதாக கல்லூரியின் புதிய அதிபர் கனகரட்ணம் ஜெயரட்ணம் முரசொலிக்குத் தெரிவித்தார்.

இவர்களுக்கான விரிவுரைகள், செய்முறைகள் யாவும் கடந்த மாதம் 28 ஆந் திகதி முதல் நடைபெற்றுவருகின்றது.

1990 - 91 கற்கை நெறிகளுக்கு விண்ணப்பித்து இது வரையும் எந்தவிமான தகவலும் கிடைக்காதவர்கள் கல்லூரி நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளும்படி அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-11)

## தமிழக தேர்தல் களம்

### 'இரட்டைக்குழலாக' அ.தி.மு.க [2] முயற்சி

பாட்டாளி மக்கள் கட்சியோடு நடத்திய பேச்சுவார்த்தைகளிலிருந்து திருநாவுக்கரசு (அ. தி. மு. க 2) அணி ஓசைபடாமல் ஒதுங்குகிறதாம் தி மு. க உடன்பாடுதான் நல்லவழி தரும் என்று நம்புகிறார்களாம். அடுத்து தமிழக முதல்வராக வருவது என்பது முக்கியமல்ல; யார் வரக்கூடாது என்பது தான் முக்கியம். எனவே தி மு. கவோடு உறவு கொள்ள வேண்டும் என்ற நிலையே அங்கு மேலோங்கி வருகிறது. இப்போது அ தி. மு. க (2) உம் தி மு. க வும் இரட்டைக் குழல் துப்பாக்கியாகச் செயற்படும் காலம் வந்து விட்டது என்றும் வலியுறுத்தப்படுகிறது. தி. மு. க வின் சார்பில் எல் கணேசன் திருநாவுக்கரசுவைச் சந்தித்துப் பேசினாராம்.

### 'அரசியல் ஸ்ரீராம 'ஜெ'யம்

அ. தி. மு க தலைமை நிலையம் பக்கம் போனால் ஏராளமான நகைச்சுவைத் துணுக்குகளைக் கேட்கலாம். ஆட்சி மன்றக் குழுக்களில 'அம்மா' தானே கேள்விகள் கேட்கிறார். நெடுஞ்செழியன் உட்பட பதினெட்டுப் பேரும் எந்தக் கேள்வியும் கேட்பதில்லை ஆனால் ஏதோ எழுதிக் கொண்டிருக்கிறார்களே? அப்படி என்ன எழுதுகிறார்கள் ? சிதம்பரத்திலிருந்து பேட்டிக்கு வந்த ஒரு தொண்டரின் கேள்வி இது.

அட, அதுவா? வேற ஒண்ணுமில்லை, புரட்சித்தலைவி வாழ்க, புரட்சித்தலைவி வாழ்க என்று தினமும் ஆயிரந் தொரு முறை எழுதுகிறார்களாம் - இது இன்னொரு தொண்டரின் பதில்.

### 'வாழ்வு பெற்ற அதிகாரிகளின் துரோகம்'

## பரு. மெதடிஸ்த கல்லூரியிலிருந்து 34 மாணவர்பட்டப்படிப்புக்குதெரிவு

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரியிலிருந்து இவ்வாண்டு 34 மாணவிகள் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இக்கல்லூரியிலிருந்து மருத்துவத்திற்கு 7 மாணவர்களும், விவசாய விஞ்ஞானத்திற்கு இருவரும் உயிரியல் விஞ்ஞானத்திற்கு ஐவரும் பொறியியல் பீடத்திற்கு மூவரும் பௌதிக விஞ்ஞானத்திற்கு அறுவரும் முகாமைத்துவத்திற்கு இருவரும், வர்த்தகத்திற்கு நால்வரும் கலைப் பீடத்திற்கு ஐவரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (15)

## சுங்கத் தீர்வையற்ற துறைமுகம் தமிழ் நாட்டில் அமையும்

தமிழ் நாட்டில் சுங்கத் தீர்வையற்ற துறைமுகம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இதுபற்றி ஆராயவென மத்திய அரசினால் அமைக்கப்பட்ட ஆலோசனைக் குழு, சுங்கத் தீர்வையற்ற துறைமுகம் அமைப்பதற்கு தமிழகம் சிறந்த இடம் என சிபாரிசு செய்துள்ளது.

## முத்தமிழ்விழாவுக்கு குடாநாடுதயாராகிறது! பல இடங்களிலும் அலங்கார வளைவுகள்

முத்தமிழ் விழாவினை சிறப்பிக்கும் வகையில் விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் கலை கலாசாரப் பிரி

இம் மாதம்6 ஆம், 7ஆம் திகதிகளில் மானிப்பாய் பகுதிகளில் முத்தமிழ் விழாநடை

## பிறேக் இல்லாத சைக்கிள்கள்; வீதிக்கு வந்தால தண்டனை!

...வின் கலை கலாசாரப் பிரிவினரால் யாழ் குடாநாட்டின் பல பகுதிகளில் மின் இணைப்புக்களுடன் கூடிய அலங்காரவளைவுகள், பந்தல்கள் என்பன அமைக்கப்பட்டு வருகின்றன.

மானிப்பாயில் செல்லமுத்து விளையாட்டு மைதானத்தில் முத்தமிழ் விழா நிகழ்ச்சிகளை நடாத்த அரங்கு ஒன்று நிர்மாணிக்கப் பட்டுவருகின்றது.

...முத்தமிழ் விழா நடை— பெறும் என்பது குறிப்பிடத் தக்கது. (ப- 11)

வீதியில் ஓடத் தகுதியில்லாத சைக்கிள்களை பயன்படுத்துவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது—இது இங்கல்ல தென்பகுதியில்.

கடந்த பத்து வருட காலத்தில் 2000 சைக்கிள் ஓட்டிகள் விபத்துக்களில் உயிரிழந்துள்ளதுடன், 24884 பேர் காயமடைந்துள்ளனர். 30, 000 சைக்கிள் வண்டிகள் இக்காலப்பகுதியில் விபத்துக்களில் சம்பந்தப்பட்டுள்ளன.

இதனால்தான் பிரேக், மணி, லைற் மற்றும் மட்காட் லைட் என்பன இன்றி வீதிகளில் சைக்கிள்களில் செல்வோருக்கெதிராக கடும் நடவடிக்கை தென்பகுதியில் எடுக்கப்படவுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

## சீறிப்பாயும் பெண் சிப்பாய்கள்

வவுனியா புகையிரத நிலையத்தில் உள்ள இராணுவ சோதனை முகாமில் பெண் பயணிகள் மீது தற்போது கடும் சோதனைகள் மேற் கொள்ளப்படுவதாக தெரிவிக் கப்படுகின்றது.

அங்கு பெண் பயணிகளை சோதனை செய்யும் பணியில் தற்பொழுது பெண்இராணுவ சிப்பாய்கள் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர்கள்.

இவர்கள் தமிழ்ப் பெண்கள் மீது சீறிப்பாய்ந்து கெடுபிடி செய்கின்றனராம். இந்த பெண் இராணுவ தொண்டர் அணியினர் வவுனியாவில் பயிற்சி பெற்றவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## தமிழர் பிரச்சினைகளைத் தீர்க்க தேர்தலின் பின் நடவடிக்கையாம்

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் மே மாதம் 11 ஆம் திகதி முடிவுற்றதும் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கான தீவிர முயற்சியில் அரசு ஈடுபட்டுள்ளதாக ஜனாதிபதி பிரேமதாசா அறிவித்துள்ளார்.

தேர்தலின் பின்னர் தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்க்கக்கூடிய வகையிலான நடவடிக்கைகளை தாமதமின்றி எடுக்க நான் தயாராக உள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

## கொடுக்கல், வாங்கல்களைத் துரிதமாக்க மக்கள் வங்கியில் 'பெட்காட்' முறை

மக்கள் வங்கியின் நடைமுறைகள் நவீன தொழில் நுட்ப 'பெட்காட்' முறைக்கு மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

இந்த பெட்காட் முறையின் கீழ் மக்கள் வங்கியில் இருபத்திநான்கு மணிநேரமும் பணவைப்பு, பணமீட்பு, காசோலை வைப்பு வேலைகள் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது

## கோன்கலனுக்கும் தடை

பிளாஸ்ரிக்பரல்களை வவுனியாவிலிருந்து வெளியே கொண்டுசெல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

5 லீற்றர் கொள்ளக்கூடிய பிளாஸ்ரிக் பரல் ஒன்று நொச்சி மோட்டையில் 125 ரூபாவாக விற்பனையாகிறது. (36)

## 'வாழ்வு பெற்ற அதிகாரிகளின் துரோகம்'

''தமமுடைய ஆட்சிக்காலத்தில் எந்த உதவியும் பெறாத பல அதிகாரிகள், ஆட்சி டிஸ்மிஸ் செய்யப்பட்டவுடன் டெலிபோனிலும் நேரிலும் அனுதாபம் தெரிவித்தார். ஆனால் வேறு அதிகாரி ஒருவர் தமது குடும்பத்தையே அனுப்பி அனுதாபம் தெரித்தார். ஆனால் நம்மால் வாழ்வுபெற்ற அதிகாரிகள் உயர்வுபெற்ற அதிகாரிகள் பலர் பதுங்கிக் கொண்டனர். இன்றைக்கு சிலர் எதிராகவே செயற்படுகின்றனர் என்று கருணாநிதி வேதனையுடன் சொன்னார்.

## பந்தாட்டமும், விரட்டலும்

ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டி. தேர்தல் வந்தால் தலைவர்களுக்கு இளைத்தவர்கள் கட்சி நிர்வாகிகள். அ. தி. மு. க. நிர்வாகிகளை ஜெயலலிதா பந்தாடுகிறார் தி மு க நிர்வாகிகளை கருணாநிதி விரட்டோ விரட்டென்று விரட்டுகிறார் என்று தமிழக அரசியல் வட்டாரங்களில் கூறப்படுகிறது.

## டி. விக்காரன் ஊட்டிய கிளுகிளுப்பு

தமக்கு எதிராக டி. வியும், வானொலியும் திட்டமிட்டுப் பிரசாரம் செய்து வருவதாகக் கண்டனம் தெரிவித்த தி.மு.க வினர் சமீபத்தில் பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றினை சென்னையில் நடத்தினர்.

இதுபற்றி ஓர் தி. மு. க. தொண்டர் சொல்லிக் கொண்டிருந்தார். நாம் ஊர்வலம் போறோம்னு சொன்னவுடனேயே டி. விக்காரன் ஆடிப்போயிட்டாண்ணே. 'ஒலியும், ஒளியும்' பார்த்தீர்களா? நீங்க ஜெயலலிதாவும் முத்துராமனும் கிளுகிளுப்பா கட்டி பிடிச்சுகிட்டுபாடுற மாதிரி ஒரு பாட்டைப் போட்டு வெச்சான் அன்னிக்கு அ. தி. மு. க. காரன் மூஞ்சையெல்லாம் பார்க்கலையோ நீங்க.

## தேசிய ஆளடையாள அட்டைகளை புதுப்பிக்க ஏற்பாடு

# கட்டம் கட்டமாகப் புதியவை!

சில வருடங்களுக்கு முன்னர் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டைகள் அனைத்தும் மீண்டும் புதுப்பிக்கப்பட வேண்டும் என ஆட்பதிவுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

கட்டம் கட்டமாக இந்தப் புதுப்பித்தல் வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதன் முதற்கட்டமாக 1972—73 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டைகள் முதலில் புதுப்பிக்கப்படவுள்ளன.

முகவரி, தொழில் மற்றும் விபரங்களில் மாற்ற மேற்பட்டுள்ளமை, உருவமாற்றம், ஆளடையாள அட்டைகள் வழங்கப்பட்டு பல வருடங்கள் சென்று விட்டதனால் அவற்றின் பாதுகாப்பு உறை பழுதடைந்துள்ளமை ஆகிய காரணங்களுக்காகவே புதிய ஆளடையாள அட்டை வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## வவுனியாவில் சிப்பாய்களுக்கு 'கறுப்பு' என்றாலே வெறுப்பு

வவுனியா இராணுவத் தலைமுகாமில் இப்போது "கறுப்பு-கூ" தடைவிதிக்கப்பட்டுள்ளது. கறுப்பைக் கண்டதும் இராணுவத்தினர் 'வெறுப்பு' அடைவதாகத் தெரியவந்துள்ளது.

கறுப்பு' என்பது வழக்கமாகக் குடிக்கும் சாராயத்தைக் கண்டு அவர்கள் வெறுப்படையவில்லை.

கறுப்புத்துணி, கறுப்பு பாசு, கறுப்புத் தொப்பி, கறுப்பு உடைகள் என்பனவே தடைசெய்யப்பட்டவை ஆகும். (ப-10)

## கோத்தணி அதிபர் கூட்டம்

யாழ் மாவட்டத்தில் அனைத்துக் கொத்தணி மற்றும் பாடசாலை அதிபர்களுக்கான அவசர கூட்டம் கோட்ட ரீதியாக நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கூட்டம் நடைபெறும் இடமும் திகதியும் வருமாறு.

வடமராட்சிக் கல்விக் கோட்டம் இன்று செவ்வாய் காலை 9 மணிக்கு வட இந்து மகளிர் கல்லூரி.

பண்டத்தரிப்பு கல்விக் கோட்டம்—இன்று காலை 11.30 மணி பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி.

மருதனாமடம் கல்விக் கோட்டம்—இன்று பிற்பகல் 1.30 மணி இராமநாதன் கல்லூரி.

தென்மராட்சிக் கல்விக் கோட்டம்—மூன்றாம் திகதி புதன் காலை 9 மணி சாவகச்சேரி இந்துக்கல்லூரி

யாழ் கல்விக் கோட்டம் புதன் பகல் 11 மணி இசிசாதனா பாடசாலை.

வேலணை கல்விக் கோட்டம் புதன் பி ப. 130 மணி வேலணை மத்திய மகா வித்தியாலயம்.

### தோட்டக்காணி கொள்வனவு

உப உணவு உற்பத்தித்திட்டத்தை ஊக்குவிக்கும்முகமாக வேலணை பநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மூன்று லட்சத்து எண்பதினாயிரம் ரூபா செலவில் 60 பரப்பு தோட்டக்காணி ஒன்றை கொள்வனவு செய்துள்ளது. (66)

## வவுனியா - யாழ் போக்குவரத்து பாதிப்பு ரயில் பயணிகள் வவுனியாவில் தரிப்பு

வவுனியா — யாழ் போக்குவரத்துக்கள் கடந்த சனிக்கிழமை முதல் தடைப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தாண்டிக்குளம் நிலைவரத்தையடுத்தே இத்தடை ஏற்பட்டுள்ளது இரண்டு மூன்று தினங்களுக்கு இந்நிலை தொடரும் என அறிவிக்கப்படுகின்றது.

கொழும்பில் இருந்து ரயில் மூலம் வவுனியாவை வந்தடைந்தவர்கள் வடக்கே வர முடியாமல் வவுனியாவில் தங்கியுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## வவுனியாவில் ஊரடங்கு

மன்னார், வவுனியா மாவட்டங்களில் நேற்று நண்பகல் முதல் காலவரையறையற்ற ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது

## நீலக்கடலில் நீலப்படகில் நீலக்கோலவுடையினர் கும்மாளம்

தீவுப்பகுதிக் கடல் பிராந்தியத்தில் ரோந்து சேவை மேற்கொள்வதற்காகப் புதிய விசைப்படகு ஒன்று நயினா தீவு சிறிலங்கா கடற்படையினருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்த நீல நிற ஊடைப் படகு நயினாதீவில் கடற்படையினரால் சில தினங்களுக்கு முன்னர் வெள்ளோட் படகில் படையினர் கும்மாள மடித்தவாறு கடலில் வலம் வந்தனராம். (20)

## இலண்டன் செல்லத் தயாராகவிருந்த நான்கு தமிழர் கட்டுநாயக்காவில் கைது

லண்டனுக்குச் செல்லத் ... இல் வைத்து இரகசியப்

---

தி. மு. க அரசு கலைக்கப்பட்ட கையோடு 'கல்கி' ராஜேந்திரன் கருணாநிதியைப் பேட்டி கண்டார். மு. க வைக் கடுமையாக விமர்சித்து வந்த பத்திரிகை 'கல்கி'. இருந்த போதும், அது பற்றி அலட்டிக் கொள்ளாமல் பதிலளிப்பதும், வாய்ப்பு வரும் போது எதிர்க் கேள்வி கேட்டு மடக்குவதும் மு. க முத்திரை!

# தேசபக்தி நேரு குடும்பத்தின் தனிச்சொத்தா?

★ கல்கி: தி. மு. க. அரசு டிஸ்மிஸ் செய்யப்பட்டதென்பதை நீங்கள் எதன் பொருட்டுக் கொடுத்த விலையாகக் கருதுகிறீர்கள்?

கலைஞர் மு. கருணாநிதி: 76 இல் கலைக்கப்பட்டதென்பது, நாங்கள் எமர்ஜென்ஸியை எதிர்த்ததற்காகக் கொடுக்கப்பட்ட விலை; ஆனால், இந்தக் கலைப்பிற்கு எந்தவிதமான காரணமும் இல்லை. சந்திரசேகர் தமது பதவியைத் தற்காலிகமாகக் காப்பாற்றிக்கொள்வதற்காகச் செய்தகாரியம் இது. எனவே, நாங்கள் இதற்கு விலை கொடுத்ததாகச் சொல்லமுடியாது.

★ கல்கி: விடுதலைப் புலிகள் மேல் நீங்கள் காட்டுகிற அனுதாபம் தான் காரணம். அதனால் ஏற்பட்டுவிட்ட பிரச்சினைகள்தான் ஆட்சிக் கலைப்புக்குக் காரணம் என்று அவர்கள் சொல்கிறார்களே?

கலைஞர்: 83-லிருந்து அவர்கள் காட்டாத அனுதாபத்தையா நான் காட்டிவிட்டேன்!

★ கல்கி: நீங்கள் அதிகபட்சம் காட்டிக்கொண்டிருக்கிறீர்கள்......

கலைஞர்: இடையவே இடையாது. அவர்கள் தான் கோடிக்கணக்கான ரூபாய்க்கு ஆயுதம் கொடுத்தார்கள். அதன்வழிக் மாநில அரசின் ஆயுத சப்ளைக்கும் பணம் கொடுத்தார்கள். தமிழகத்தில் போராளிக் குழுக்களின் 31 காம்ப்கள் இருந்தன. அவற்றில் எல்லாவிதமான இராணுவப் பயிற்சிகளும் நடந்தன. இதெல்லாம் தி. மு. க. ஆட்சிக் காலத்திலா நடந்தன? இலங்கைப் போராளிகள் இலங்கையில் தங்கள் உரிமைகளுக்காகப் போராடிக் கொண்டிருப்பதன் பேரில் எங்களுக்கு அனுதாபம் உண்டு. அதேநேரத்தில் தமிழ்நாட்டை அவர்கள் வன்முறைக் களமாக ஆக்குவதை அனுமதிக்கமுடியாது இது தான் தி. மு. க வின் திட்டவட்டமான கருத்து. இவை மாத்திரமல்ல: தி. மு. க. ஆட்சியிலிருந்த போதும் சரி, ஆட்சியில்லாத போதும் சரி ஒவ்வொரு பிரதமரையும் கலந்தாலோசித்து வந்திருக்கிறோம். முன்பு இந்திராகாந்தி அம்மையார் பிரதமராக இருந்தபோது நாங்கள் எதிர்க்கட்சியில் இருந்தோம். அப்போதும் அவர் கருத்தறிந்து செயற்பட்டிருக்கிறோம். அதன் பிறகு நான் இங்கு முதல்வராக இருந்தபோது பிரதமர் ராஜீவ் காந்தியிடமும் பேசினோம். அவர் புலிகளோடு பேச்சுவார்த்தை நடத்தச் சொன்னார். அது பற்றி முரசொலி மாறனுக்குக் கடிதம் கூட எழுதியிருக்கிறார். பேச்சுவார்த்தைக்கான நாளும் குறிக்கப்பட்டது. இதற்கிடையில் மார்ச் 25 இல் சட்டமன்றத்தில் ஏற்பட்ட சம்பவத்தின் காரணமாக அவருக்கு ஏற்பட்ட அரசியல் அழுத்தம் காரணமாக அதை அப்படியே நிறுத்திவைத்துவிட்டார். அதன் பிறகு வி. பி. சிங் பிரதமரானார். அப்போது நான் வி. பி. சிங்கிடம் மாத்திரம் ஆலோசனை செய்யவில்லை. வி. பி. சிங், ஜோதிபாசு அத்வானி. வாஜ்பாய், இந்திரஜித் குப்தா இ. எம். எஸ் நம்பூதிரி பாட், பிட்டபாசு ஆகிய அனைவரிடமும் பிரதமர் வீட்டில் கலந்துபேசினோம்.

போராளிகளாகவே இருந்தாலும் அவர்கள் இலங்கையில் கையொடித்து காலொடித்து வருகிற போது...

...வெல்லாம் ஸ்பெஷல் காம்ப்களில் வையுங்கள் அதற்கு அவர்கள் மறுத்தால் இலங்கைக்கே திருப்பியனுப்பி விடுவதாக மிரட்டுங்கள்" என்றார். இதுதான் சந்திரசேகர் என்னிடம் சொன்ன செய்தி! இரகசியம் என்று ஏதாவதிருந்தாலும் இதை அதிகாரிகளிடம் சொல்லாமல் எப்படி நடவடிக்கை எடுக்க முடியும்? அப்படிச் சொல்லித்தான் தனித்தனிப் போராளிக் குழுக்களையும் வேலூர், புதுக்கோட்டை என்று தனித்தனி ஸ்பெஷல் காம்ப்களில் வைத்தோம். போலீசார் இவ்வாறு மிரட்டி நடவடிக்கை எடுக்க ஆரம்பித்ததுமே விஷயம் விடுதலைப் புலிகளுக்குத் தெரியாமல் எப்படி இருக்க முடியும்? ஆக, ரகசியத்தை வெளிவிட்டு விட்டோம் என்பது எவ்வளவு அபத்தம்! போகட்டும் போராளிக் குழுக்களின் காம்ப்கள் இருப்பதாகச் சொன்னார்களே—இப்போது தான் எங்கள் ஆட்சி கலைக்கப்பட்டு விட்டதே. எத்தனை காம்ப்களைக் கண்டுபிடித்திருக்கிறார்கள்? நாம் கவலைப்படுவது போராளிகளைப் பற்றி மட்டுமல்ல, இலங்கையில் உள்ள அப்பாவித் தமிழர்கள் குறித்துத்தான் அதிகம் வருந்துகிறோம். இப்போது கூட இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரமான தீர்வு காணப்படுமானால் எல்லோருக்கும் மிகவும் மகிழ்ச்சிதான்.

★ கல்கி: தீவிரவாதிகளிடம் அனுதாபம் காட்டியவர் என்பதால் வரப்போகிற தேர்தலில் உங்களை ஒரு தேச விரோதியாகச் சித்திரித்துப் பிரசாரம் செய்வார்களே?

கலைஞர்: பரூக் அப்துல்லாவைக்கூடத்தான் தேசவிரோதி என்றார்கள். இப்போது ராஜீவ் காந்தியும் பரூக் அப்துல்லாவும் ஒரே ஹெலிக்கொப்டரில் பறந்து வந்து ஜெயலலிதாவைச் சந்திக்கவில்லையா? தேச பக்தி என்பது நேரு குடும்பத்திற்கு மாத்திரமே சொந்தமான ஒன்றா என்ன! தேச பக்தியை ராஜீவ் காந்தி மட்டுமேதான் குத்தகைக்கு எடுத்திருக்கிறாரா என்ன!

★ கல்கி: உங்களை அப்படிச் சித்திரிப்பதற்கு ஒரு வாய்ப்பு இருக்கிறதென்பதால் நீங்கள் இன்னும் கொஞ்சம் ஜாக்கிரதையாக இருந்திருக்கலாமோ என்று தோன்றுகிறது.

கலைஞர்: எப்படியிருந்தாலும் பத்துப் பேர் ஆதரவு என்கிற எலும்புத்துண்டைக் காப்பாற்றிக் கொள்வதற்காகச் சந்திரசேகர் எதையுமே செய்வார். அதற்குக் காரணங்களே தேவையில்லை. பதினோராம் தேதி எனக்கெழுதிய கடிதத்தில் வன்முறைச் சம்பவங்கள் உள்ள மாநில லிஸ்டில் தமிழ்நாடு இல்லை என்கிறார் சந்திரசேகர். பதினைந்தாம் தேதி தி.மு.க அரசைக் கலைக்கும் திட்டம் ஏதும் இல்லை என்று பேட்டி கொடுக்கிறார். ஆனால் பாரிலிமெண்டில் பேசும்போது அவர் விடுதலைப்புலிகள் தொடர்பாகச் சொன்ன ஒரு செய்தியை - நான் முன்பு சொன்ன அந்த 'ரகசியம்' தான் - நான் புலிகளுக்கு வெளியிட்டதாகப் பொய் சொல்கிறார். உடனே ராஜ்ய சபாவில் களேபரம் நடக்கிறது. பின்னர் எதிர்க்கட்சித் தலைவர்கள் கேட்டபோது வேலூரில் கைது செய்யப்பட்ட உல்ஃபாவைச் சேர்ந்த ஒருவன், தமிழ்நாடு...

இந்த நீல நிறமுடைய படகு நயினாதீவில் கடற்படையினரால் இலங்கைக்கு முன்னர் வெள்ளோட்டம் விடப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வெள்ளோட்டத்தின் போது

## நான்கு தமிழர் கட்டுநாயக்காவில் கைது

லண்டனுக்குச் செல்லத் தயாரான நிலையிலிருந்த நான்கு தமிழர்கள் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து இரகசியப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஒருவர் பெண்மணியாவார். பிரிட்டனுக்குச் செல்வதற்கு இவர்கள் போலி விஸாக்களைச் சமர்ப்பித்திருந்ததாக அறிவிக்கப்படுகின்றது.

கடந்த சனிக்கிழமை இரவு இவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

## 7500 சாவடிகள்; 86 லட்சம்பேர் வாக்களிப்பு
## 236 சபைகளுக்கு 3533 உறுப்பினர் தெரிவு

எதிர்வரும் மே மாதம் பதினோராம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல்களுக்கான பிரசாரங்கள் அனைத்தும் மே மாதம் 8 ஆம் திகதி நள்ளிரவுக்கு முன்னர் நிறுத்தப்படல் வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை வரை உள்ளூராட்சித்தேர்தலில் போட்டியிடுவதற்கென 18 நிலையங்களில் 870வேட்பாளர்கள் நியமனப் பத்திரங்களைத்தாக்கல் செய்துள்ளனர் இவற்றில் 73 பேரின் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

236 மாநகர, நகர மற்றும் பிரதேச சபைகளுக்கு நடாத்தப்படவுள்ள இத் தேர்தலில் பதினையாயிரம் வேட்பாளர்கள் போட்டியிடுவார்கள் இவர்களிலிருந்து 3533 உறுப்பினர்கள் தெரிந்தெடுக்கப்படுவர்.

மொத்தம் 86 லட்சத்து தொண்ணூற்றாராயிரம் வாக்காளர்கள் உள்ளூராட்சித் தேர்தலில் வாக்களிப்பர். இதற்கென 7500 வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

## நீரில் பிறக்கும் குழந்தைகள்
### தாய்க்கும்வலியில்லை பிள்ளைக்கும்...

உலகம் முழுவதிலும் இதுகாலவரையில் 2000 குழந்தைகளுக்கு மேல் நீருக்கடியிற் பிறந்துள்ளன. நீருக்கடியில் மகப்பேறு நடக்கும் புதிய முறை மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும் அமெரிக்கா, ஜப்பான், நியூஸிலாந்து நாடுகளிலும் நடைபெற்று வருகின்றது.

நீருக்கடியில் மகப்பேறு நடக்கும் போது தாய்மாருக்கு அதிகவலி இருப்பதில்லை. புதிதாகப் பிறந்த குழந்தையைப் பலமணிநேரம் நீரில் வைத்திருந்தால் குழந்தையின் இரத்தோட்டம், இதயநாளங்கள், மூளை முதலியன மிகுந்த செயற்துடிப்புடன் இயங்குவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

நீருக்கடியில் என்றால் குளியல் தொட்டி, நீச்சற் தடாகம், கடலிலும் குழந்தைகள் பிறக்கின்றன. இக் குழந்தைகள் வளர்ந்ததும் கோபக்காரர்களாக இருப்பதில்லையாம்.

போராளிகளாகவே இருந்தாலும் அவர்கள் இலங்கையில் கையொடிந்து காலொடிந்து வருகிற போது, நாம் அவர்களை அப்படியே கடலில் தூக்கிப் போட்டுவிட முடியாது என்பதால் நாம் அவர்களுக்குச் சிகிச்சையளிப்பதில் தவறில்லை என்று முடிவு செய்தோம். 87 இலேயே இங்கிருந்த முகாம்கள் கலைக்கப்பட்டுவிட்டன-ஈ. பி. ஆர். எம். எஃப் குழுவினர் இலங்கை அரசுக்கு ஆதரவாகச் சென்று விட்டார்கள். விடுதலைப் புலிகள் இலங்கைக்குப்போராடுவதற்காகச்சென்றுவிட்டார்கள். என்ற நிலையிலும் இங்கு ஒரு கணக்கெடுத்தோம். அதில் ஏழாயிரம் பேர் இங்கே இருப்பதாகச் சொன்னார்கள். அவர்களெல்லாம் அகதிகளாக வந்த அப்பாவித் தமிழர்கள்: கொஞ்சம் வசதி மிக்கவர்கள் தனித்தனியாக இங்கே வீடெடுத்துத் தங்கிக் கொண்டிருந்தார்கள். அதனிடையே சில போராளிகளும் உலவிக் கொண்டிருக்கிறார்கள் என்று உணரத்தலைப்பட்ட நேரத்தில் சந்திரசேகர் பிரதமரானார்.

அவரிடமும் சென்று பேசினேன். 'அவர்களெல்லாம் ஏன் வெளியில் உலவிக் கொண்டிருக்கிறார்கள்?' என்று கேட்டார். 'அவர்கள் மீது என்ன குற்றம் சாட்டிக் காவலில் வைப்பது? வழக்குப் போட்டால் குற்றம் ஏதும் ருசுவாகவில்லை என்று விடுதலை பெற்றுவிடுகிறார்கள். விசாரணை இன்றிக் காவலில் வைக்கலாம் என்றாலோ, என். எஸ். ஏ. வில் கைது செய்து நீதிமன்றத்திற்குக் கொண்டு சென்றால், அவர்கள் இந்த தேசத்தவர்கள் இல்லை என்பதால் அவர்களுக்குத் தேசியப் பாதுகாப்புச் சட்டம் பொருந்தாது என்று சொல்லி நீதிபதி விடுதலை செய்து விடுகிறார். என்ன செய்யலாம்?' என்று நான் கேட்டேன். அப்படியானால் அவர்களை

றது. பின்னர் எதிர்க்கட்சித் தலைவர்கள் கேட்டபோது வேலூரில் கைது செய்யப்பட்ட உல்ஃபாவைச் சேர்ந்த ஒருவன், தமிழ்நாட்டில் உல்ஃபா காம்ப் இருப்பதாகப் பொலிஸாரிடம் எழுதிக்கொடுத்ததாகச் சொல்லியிருக்கிறார். அந்த உல்ஃபா வீரனைக் கைதுசெய்து கொடுத்ததே நாங்கள்தான்! பொலிஸ்காரர்கள் எதுவேண்டுமானாலும் எழுதி வாங்கியிருக்கலாமே என்று எதிர்க்கட்சித் தலைவர்கள் கேட்டிருக்கிறார்கள். அதற்குச் 'சரிசரி. இதோடு விட்டுவிடுங்கள்; கலைக்க மாட்டேன்' என்று சொல்லியிருக்கிறார். அதன் பிறகு கலைத்ததற்குக் காரணம் என்ன? மக்களைக் கவருகிற திட்டங்களைத் தி.மு.க. அரசு பட்ஜெட்டில் அறிவிப்பதற்கு முன் - 2 ஆம் தேதிக்கு முன் கலைக்கப்படாவிட்டால் 5 ஆம் தேதி ஆதரவை வாபஸ் வாங்கிக்கொள்வோம் என்ற இவர்களின் நெருக்குதல்தானே தவிர வேறொன்றுமில்லை.

★ கல்கி: உங்கள் ஆட்சி டிஸ்மிஸ் செய்யப்பட்டதைக் கண்டித்து எழுதும் பத்திரிகைகள் கூட விடுதலைப்புலிகள் விஷயத்தில் நீங்கள் நடந்து கொண்ட விதம் பற்றி உங்களைக் குறை சொல்லித்தான் எழுதியிருக்கின்றன!

கலைஞர்: அவர்கள் புரியாமல் எழுதினால் நான் என்ன செய்ய முடியும்? மூன்று மாவட்டங்கள் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில்தான் இருக்கின்றன. அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இல்லையென்று எழுதினார்களே, உண்மையா அது?

★ கல்கி: அரசியல் சாசனத்தின் 356 ஆவது பிரிவு சில சமயங்களில் அநியாயத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது என்றாலும் அதை முழுமையாக நீக்குவது சரியானதுதானா?

(தொடரும்)

# ஆண்டு 8 மாணவர்களுக்கும் புலமைப்பரிசில் பரீட்சை

ஆண்டு 8 மாணவர்களுக்கான புதிய புலமைப்பரிசில் பரீட்சையை இவ்வாண்டு இறுதிக்குள் நடாத்த கல்வி அமைச்சு திட்டமிட்டுவருகிறது.

விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் ஆகிய மூன்று பாடங்களில் இப் பரீட்சை நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இப் பரீட்சைக்குத்தோற்றி புலமைப் பரிசிலுக்கு தகுதி பெறாத ஆனால் பரீட்சையில் சித்திபெறும் மாணவர்களுக்கு தேசிய சான்றிதழ் வழங்கப்படவுள்ளது.

இது குறித்து பிராந்திய பணிப்பாளர்களிடமும் கல்வி அதிகாரிகளிடமும் கல்வி அமைச்சு ஆலோசனைபெற்று வருகிறது. (38)

★ அரச அதிபர் முயற்சி

# கிளிநொச்சிப் பகுதியில் தென்னை மரச் செய்கை

தென்னம் நாற்றுகள் 5 ரூபா வீதம் கிளிநொச்சிப் பகுதி பின்தங்கிய கிராம மக்களுக்கு வழங்க கிளிநொச்சி அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

தூர இடங்களில் உள்ளவர்களுக்கு விரைவில் வாகனங்களில் அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சிப் பகுதியில் தென்னை மரங்கள் செழிப்பாக வளருவதால் இது மேற்கொள்ளப்படுவதாகவும் எதிர்காலத்தில் தேங்காய் மற்றும் தென்னம் பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்படாதிருக்கவுமே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது (ப 6)

# வெள்ளவத்தை நகைக்கொள்ளையர் பொலிஸாரிடம் சிக்கினர்

வெள்ளவத்தையில் பல கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்ட தமிழ் இளைஞர் குழுவொன்று நேற்று கைது செய்யப்பட்டுள்ளது.

இக்குழுவில் எட்டுப்பேர் அடங்கியிருந்ததாகவும் இவர்கள் அனைவரும் மட்டக்களப்பைச் சேர்ந்தவர்கள் எனவும் இவர்களைக் கைது செய்த வெள்ளவத்தை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இக்குழுவில் இரு இளம் பெண்களும் அடங்குகின்றனர். இத்தமிழ்க் குழுவினர் கடந்த சில மாதகாலமாக வெள்ளவத்தைப்பகுதியில் பல வீடுகளில் பலவந்தமாகப் புகுந்து நகைகளை கொள்ளையடித்தவர்கள் என வெள்ளவத்தை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# லலித், ஹேமா குழுவினர் வவுனியா நகருக்கு விஜயம்

கல்வி அமைச்சர் லலித் அத்துலத்முதலி இம்மாதம் 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வவுனியா நகருக்கு விஜயம் செய்யவுள்ளார்.

அமைச்சருடன் ஜனாதிபதியின் பாரியார் திருமதி ஹேமா பிரேமதாஸ கல்வி ராஜாங்க அமைச்சர் ராஜமனோகரி புலேந்திரன், கல்விச்சேவைகள் அமைச்சர் திருமதி சுனேத்ரா ரணசிங்க ஆகியோரும் வருகின்றனர்.

வவுனியா மாவட்டப் பாடசாலை அதிபர்கள், கல்வி அதிகாரிகளை இவர்கள் சந்தித்துப் பேசுவார்கள். (38)

# ஓய்வு பெற்ற ஆசிரியருக்கு இடைக்கால ஓய்வூதியம்

யாழ் கல்வித்திணைக்களத்தினால் சகல கோட்டக்கல்வி அதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்டுள்ள கடிதச் சுற்றுநிருபத்தின் படி இளைப்பாறியுள்ள ஆசிரியர்களுக்கும், கல்வித்திணைக்கள ஊழியர்களுக்கும் தற்காலிக ஓய்வூதியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இதனால் ஓய்வு பெற்றவர்களின் பெயர், சம்பள அளவுத்திட்டம் போன்ற விவரங்களை படிவத்தில் உடன் நிரப்பி யாழ் கல்வித்திணைக்களத்துக்கு அனுப்பி வைக்குமாறு பணிக்கப்பட்டுள்ளது. (78)

---

தமிழரின்—

இயையோ, சுபிட்சத்தையோ, பொருளாதார விருத்தியையோ எதிர்பார்க்க முடியாது.

இந்த நாட்டைப் பிரிக்க வேண்டிய அவசியமில்லை. தமிழ் மக்களின் சுய நிர்ணய

# இராணுவ நடவடிக்கையினால்

# வலி. வடக்கில் வெற்றிலைச் செய்கை பாதிப்பு

சுடாநாட்டின் வெற்றிலைச் செய்கை முற்றாகப் பாதிக்கப்படும் நிலைதோன்றியுள்ளது.

கீரிமலை, கருகம்பனை, கொல்லங்கலட்டி, மயிலங்கூடல், விழிசிட்டி, பன்னாலை, மாவிட்டபுரம் பகுதிகளிலிருந்தே சுடாநாட்டுக்குத் தேவையான வெற்றிலை உற்பத்தி செய்யப்பட்டு வந்தது.

இப்பகுதியிலிருந்து மக்கள் இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்து வருவதால் வெற்றிலைச் செய்கையை கைவிட வேண்டிய நிலை தோன்றியுள்ளது.

இதனால் தென்னிலிருந்தே வெற்றிலையைத் தருவிக்க வேண்டிய நிலை ஏற்படும் எனவும் வெற்றிலை வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனை வேறு இடங்களில் உற்பத்தி செய்வது தற்போதைய நிலையில் கைகூடாது என இச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் தெரிவிக்கின்றனர். 48

# குடாநாட்டில் சிறு கைத்தொழில் மீண்டும் ஆரம்பம்

யாழ் மாவட்ட சிறு கைத்தொழில் திணைக்களத்தினால் ஆரம்பிக்கப்பட்ட சில கைத்தொழிற்சாலைகள் மீண்டும் உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றன.

சங்கானை, அராலி, மல்லாகம், கரவெட்டி, மீசாலை, சாவகச்சேரி ஆகிய இடங்களில் தும்புத் தொழிற்சாலையும் சங்கானையில் மட்பாண்டத் தொழிற்சாலை யொன்றும் தீவிர உற்பத்தியில் இறங்கியுள்ளதாக இத்துறை சார்ந்த அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

உற்பத்தியாகும் பொருள்கள் உடனுக்குடன் அவ்வப் பகுதிகளில் உள்ள பல நோ. கூ. சங்கங்கள் மூலமாக சந்தைப்படுத்தப் பட்டுவருவதாலும் அண்மைக்காலங்களில் தும்புத்தடி, கயிறு வகைகளுக்கு ஏற்பட்ட விலையுயர்வு வீழ்ச்சி கண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது 66

# கிளிநொச்சியில் சிறு போகம் தண்ணீர்ப் பங்கு நடவடிக்கை

கிளிநொச்சியில் சிறு போக வேளாண்மைக்கான தண்ணீர்ப்பங்கு மாற்றும் படிவங்கள் தற்போது கிளிநொச்சி கமநல சேவை நிலையத்தால் விநியோகிக்கப்படுகிறது.

விவசாயிகள் விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து 10-4-91க்கு முன் சமர்ப்பிக்குமாறு கிளிநொச்சி பெரும்பாக உத்தியோகத்தர் ச. உருத்திரேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

விவசாயிகளுக்கான அடையாள அட்டைகளை பெற்றுக்கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார்.

தற்போது மீண்டும் பழைய காரியாலயத்தில் கமநலச் சேவை நிலையம் இயங்குகிறது எனவும் அவர் தெரிவித்தார். (ப-6

அனுரா பண்டாரநாயக்கா கிண்டல்:

# தேர்தலில் போட்டியிட முடியாதவர்களே கட்சி விட்டு கட்சி மாறுகிறார்கள்

கட்சி மாறுவது பற்றி அரச சார்பான பத்திரிகைகளும், தொலைக்காட்சியும் பெரிதுபடுத்துகின்றன. இவ்வாறு கட்சி மாறுபவர்கள் தேர்தலில் போட்டியிட ரிக்கற் கிடைக்காதவர்களே.

இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பிரதம அமைப்பாளர் அனுரா பண்டாரநாயக்கா தெற்கில் இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

அவிசாவளையில் ஒருவர் சுதந்திரக் கட்சியில் இருந்து யூ. என். பிக்குமாறியுள்ளார். அவருக்கு யூ என் பி அமைப்பாளர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சரான சூரியாராய்ச்சி யூ. என். பி. மேடைகளில் பேசிவருகிறார். 1970-1977 காலப்பகுதியில் சுதந்திரக் கட்சியின் ஒழுக்கீனம் என்று அன்று கூறியவர் ஜனாதிபதி பிரேமதாஸ.

சூரியராய்ச்சியும் டபிள்யூ ஜே பி. ஆரியதாஸாவும் பாராளுமன்றத்திலேயே அடிபட்டவர்களை அதை அன்று சொல்லாதிருந்த ஜனாதிபதி பிரேமதாஸ இன்று யூ. என். பி. கூட்டங்களில் அவர்கள் பேசுவதைப்பற்றி ஒன்றும் கூறவில்லை. 12

# வெற்றிபெற்றது

உயிர்ப்புஞாயிறு திருநாளை முன்னிட்டு, ஈச்ச மோட்டையில் 45 வது முறையாக, மணமானவர்களுக்கும் மணமாகாதவர்களுக்கும் இடையில்நடைபெற்ற மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் மணமாகாதவர்கள் அணியே இம்முறையும் வெற்றி பெற்றது. (16)

# ஓய்வூதிய விவரங்களுடன் விண்ணப்பிக்க வேண்டும்

ஓய்வூதியம் சம்பந்தமான முறைப்பாடுகளை அனுப்பி வைப்பவர்கள் இது சம்பந்தப்பட்ட விவரங்களை அனுப்பி வைக்காமையால் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதிருப்பதாக யாழ் செயலக பிரதம கணக்காளர் தெரிவித்துள்ளார்.

ஓய்வூதியர்கள் இவ்வாறான முறைப்பாடுகளை அனுப்பும் போது தமது பெயர், முகவரி விவரங்களுடன் பென்சன் இலக்கம், வங்கியின் பெயர் ஆகிய விவரங்களையும் அனுப்பிவைத்தால் கூலக்கிரமத்தில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது (66)

---

காரைநகரிலிருந்து...

இரண்டை புங்கை ...யைபற்றியுள்ளனர். இதன் போது சில கடற்படையினர் கொல்லப்பட்டிருக்கலாம். முழுமையான சேத விவரங்கள் இது வரை தெரியவில்லை.

கடற்படை முகாமின் ...யைப்பகுதியில் பெரும் தீப் பிளம்புகள் தோன்றியுள்

---

ஊர்காவற்றுறை...

ளன.

மேலும் வெடிக்காத நிலையிலும் சில ஷெல்கள் கண்டெடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஷெல் வீச்சுக்கள் மத்தியில் ...

# 200 ஸ்ரீலங்கா சிப்பாய்கள் பெங்களூருக்குப் பயணம்

கொழும்பில் இருந்து பெங்களூருக்கு வடக்கு, கிழக்குப் பகுதிகளில் கடமை புரிந்த 200 சிப்பாய்கள் விமானம் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு பெங்களூரில் உள்ள செயற்கை அவயத் தொழிற்சாலை ஒன்றில் ...

---

வவுனியாவில்...

பி மனோகரன், எஸ். சிவ ...

**தமிழரின்—** இலையோ,சுபிட்சத்தையோ, பொருளாதார விருத்தியையோ எதிர்பார்க்க முடியாது.

இந்த நாட்டைப் பிரிக்க வேண்டிய அவசியமில்லை. தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமையை அங்கீகரித்து பிரதேச சுயாட்சியும் போதிய அதிகாரங்களும், வழங்கப்பட வேண்டும். (33)

**விமானமூலம்—** இங்கு வழங்கப்பட்ட இரண்டாயிரம் ரூபாவையும் நாலாயிரம் ரூபாவையும் பெற்றுக்கொண்டு இவ்வாறு இந்தியா சென்று திரும்பியமைக்காகவும் நிவாரணப் பணம் கோரி விண்ணப்பித்ததுடன் இதனை கட்டாயம் தரவேண்டுமென்று வாதாடி வருவதாகவும் இப்பணியகம் சார்ந்த அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

இராமசேவை அலுவலர்கள் உதவி அரசாங்க அதிபர்கள் ஆகியோரின் விசாரணைகளின் பின்னர் நியாயப்படுத்தப்படும்பட்சத்திலேயே இவ்வாறான கொடுப்பனவுகளை வழங்க முடியுமெனவும் அவ்வதிகாரி தெரிவித்தார் (66)

இதனால் ஓய்வு பெற்றவர்களின் பெயர், சம்பள அளவுத்திட்டம் போன்ற விபரங்களை படிவத்தில் உடன் நிரப்பி யாழ் கல்வித்திணைக்களத்துக்கு அனுப்பி வைக்குமாறு பணிக்கப்பட்டுள்ளது. (78)

## நயினாதீவு...

தங்கொள்வதாகவும் இச்சமயத்திலேயே குறிகாட்டுவான் பகுதியிலுள்ள மக்கள் தமது வீடுகளைப்பார்வையிட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ப 17)

## யாழ் அரசாங்க...

மெனவும் செயலகவட்டாரங்களின் அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இவரின் இடத்திற்கு முல்லைத்தீவு அரசாங்க அதிபர் இடமாற்றப்படலாம் எனவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (66)

## இராணுவச்...

வரிசையில் நின்று இவற்றைப் பார்வையிட்டனர்.

இதே வேளை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி ஒருவர் நேற்றுப் பிற்பகல் இராணுவத்தினரின் உடல்களைபபார்வையிட்டார் 70)

றியுள்ளனர். இதன் போது சில கடற்படையினர் கொல்லப்பட்டிருக்கலாம். முழுமையான சேத விபரங்கள் இது வரை தெரியவில்லை.

கடற்படை முகாமின் மையப்பகுதியில் பெரும் தீப்பிளம்புகள் தோன்றியவண்ணம் உள்ளன. இதேசமயம் அச்சம் காரணமாக மக்கள் இரவோடிரவாக இடம் பெயர்ந்தவண்ணம் உள்ளனர். (ப 31)

## வேப்பங்குளம்...

ஸ்ரான்லி (பெனான்டோ, முல்லைத்தீவு). லெப். அருள் (கறுப்பையா நித்தியகந்தேஸ்வரன், கிளிநொச்சி). லெப். வேகு (செபஸ்தியன் ஜோசப் அன்ரனி, கிளிநொச்சி), புனிதன் (தி. விஜயன், வவுனியா) குஞ்சன் (க. கமலேஸ், முல்லைத்தீவு), நிதி (வே. பரமேஸ்வரன், முல்லைத்தீவு), மைமன் (மிகாயில் திவ்வியநாதன், மன்னார்), பொஸ்கோ (சந்திரன் பத்மநாதன், மன்னார்). ரவி (சுப்பிரமணியம் ஜெயநேசன், முள்ளியவளை) துஷான் (கிதோர் மோகனதாஸ், முல்லைத்தீவு). கண்ணன் (மாசிலாமணி ரஜேஸ்வரன், முல்லைத்தீவு), பைரவி (நாகேந்திரன் சுரேஷ்குமாரி, நெடுந்தீவு) இவர்களிற்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர். (71)

## ஊர்காவற்றுறை...

ளன.

மேலும் வெடிக்காத நிலையிலும் சில ஷெல்கள் கண்டெடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஷெல் வீச்சுக்கள் மத்தியில் ஹெலி ஒன்றும் பரவலாகத் தாக்குதல்களை நடாத்தியதாகவும் கூறப்படுகிறது.

ப-17

## தி. மு. கவுக்கு...

வரட்டும் அதன் பின்பார்த்துக் கொள்வோம் அப்புத்தகம் நிச்சயமாக தி. மு. கவுக்கு சாதகமாக இருக்கும் என அவர் பதிலளித்தார். யார் உண்மையான தேசவிரோதி என்பதை அப்புத்தகத்திற்கு நாம் எழுதும் பதில் நூலில் விளக்குவோம் என்றார் கருணாநிதி. (38)

கொழும்பில் இருந்து பெங்களுருக்கு வடக்கு, கிழக்குப் பகுதிகளில் கடமை புரிந்த 200 சிப்பாய்கள் விமானம் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு பெங்களூரில் உள்ள செயற்கை அவயவ தொழிற்சாலை ஒன்றில் செயற்கைக் கால்கள் பொருத்தப்படவுள்ளன. வட கிழக்கில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையின்போது இவர்கள் தமது கால்களை இழந்திருந்தனர்.

ஏற்கனவே செயற்கைக் கால் பொருத்துவதற்காக பெங்களூருக்கு அனுப்பப்பட்டிருந்த 420 சிப்பாய்களில் 200 பேர் செயற்கை அவயவங்கள் பொருத்திக்கொண்டு கொழும்பு திரும்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப 11)

## வவுனியாவில்...

பி மனோகரன், எம். சிவஞானசோதிலிங்கம், கே. வீரசிங்கம், எம். தர்மகுலசிங்கம், வி. ஜெகநாதன், எம் திருச்செல்வம், கி. சிவலிங்கம், வை. செல்வரட்ணம், பி. தேவநாயகம் ஆகியோரே விடுதலை செய்யப்பட்டவர்கள்.

மேலும் 37பேர் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. வடபகுதிக்குத் தடைசெய்யப்பட்ட பொருள்களைக் கொண்டுசென்றமையே இவர்கள் கைது செய்யப்பட்டமைக்கு காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. 38

“தமிழுண்டு தமிழ்மக்களுண்டு -- இன்பத் தமிழுக்கு நாளும செய்வோம் நல்ல தொண்டு!”

**விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி எடுக்கும்**

**கோலாகலமான முத்தமிழ் விழா!**

★ 6 — 7 மானிப்பாய் ★ 10 — 11 சாவகச்சேரி

★ 8 — 9 புங்குடுதீவு ★ 12 — 13 நெல்லியடி

இப்பத்திரிகை முரசொலி பப்பிளிகேஷர்ஸ் (பிறைவேட்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்லியங்காடு டச்சு வீதி. லஷ்மிபில்டிங்'கில் உள்ள அச்சகத்தில் 02 -04 -1991 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.